**கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்**

# பதவி வெற்றிடங்கள் — புல்மோட்டை பொறித்தொகுதி

**முழுமையாக அரசுரிமையான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## 01. பிரதிப் பொது முகாமையாளர் (பொறித்தொகுதி / செயற்பாடுகள்) / Deputy General Manager (Plant / Operations)
**சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (HM 1-3)**

**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - (01 வெற்றிடம்))**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**(அ) கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

அகழ்தல் மற்றும் தயார்படுத்துதல் / பொறிமுறை / சிவில் / மின்சாரம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அல்லது**

பொறியியல் துறைக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்

மற்றும்

**அனுபவம் -** அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 17 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

**(ஆ) கல்வித் தகைமைகள் - பொறியியல் துறைக்கு இயைபுடைய அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின்** முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

**அனுபவம் -** அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 17 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (HM 1-1) குறைந்தபட்சம் 02 வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. முகாமைத்துவ சேவை தொகுதி Iஆம் தரத்தில் (MM 1-1) குறைந்தபட்சம் 07 வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**HM-1-3 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

**சம்பள குறியீட்டு இலக்கம் -** HM-1-3, ரூபா 86,865/- = 2,270x15 = 120,915/-

ரூபா 86,865/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை** : 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VIIஆம் பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**HM-1-3** சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.

1. PED/1/2015, PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) எனும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகனம் எனும் இரண்டில் ஒன்று வழங்கப்படும்.

## 02. புவியியலாளர் / Geologist
**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்))**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

**கல்வித் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் புவியியலாளர் பட்டமொன்று, (இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்கள் உட்பட) அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் புவியியல் துறைக்கு இயைபான பதவியொன்றில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

**சம்பள சங்கேத இலக்கம்** - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுககு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**கவனிக்கவும்: 2024-07-07ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

## 03. பொறியியல் உதவியாளர் / Engineering Assistant
**முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவை தொகுதி (MA 2-1)**

**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்))**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

**தொழில்நுட்பத் திறன்/தேர்ச்சி**

பொறியியல் உதவியாளர் கடமை பொறுப்புகளுக்கு இயைபாக தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் அகழ்தல் / பொறிமுறை / மின்சாரம் / சிவில் / உற்பத்தி துறைக்கு இயைபாக தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத கற்றை நெறியொன்றைக் கற்று தொழில்நுட்பத் திறன் / தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**MA-2-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள குறியீட்டு இலக்கம் - MA-2-1, ரூபா 30,310/- = 300x10, 350x7, 495x4, 660x20 = 59,940/-

ரூபா 30,310/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**கொடுப்பனவுகள் மற்றும் அனுகூலங்கள்**

**கொடுப்பனவுகள்**

01. திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள்
08. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும். (HM-1-3, MM-1-1 சேவை வகுதி பதவிகளுக்கு மட்டும்)
09. திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 1800.00 ரூபா மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு

**அனுகூலங்கள்**

01. வருடாந்த போனஸ் கொடுப்பனவு
02. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி காப்பீடு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி காப்பீடு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
03. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு
    ii. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு ஒரு முறை வெளிவாரி சிகிச்சைக்காக 5000.00 ரூபா வழங்கப்படும்.
    iii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா வழங்கப்படும்.
04. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
05. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Payee Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது மின்னஞ்சல் முகவரியையும் உள்ளடக்கி உங்களின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்கள் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வகையில் சகல கல்வி, தொழில்சார்ந்த மற்றும் சேவை சான்றிதழ்களினதும் புகைப்படப் பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். (முறையாக சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

உங்களால் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, 341/13 இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் தலைவருக்குக் கிடைக்கும் வகையில் 2025 மார்ச் 03ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/13, சரண மாவத்தை,**
**ராஜகிரிய.**